بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகத்துவமிக்க சஹாபாக்களின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்புகள்**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 15 பிப்ரவரி 2019 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

நான் இன்று எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபாக்களில் முதலாவது காலித் பின் கைஸ் ஆவார்கள். காலித் அவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தின் ஒரு கிளையாகிய பனு பியாலாவைச் சார்ந்தவர் ஆவார்கள். அன்னாரின் தந்தையார் கைஸ் பின் மாலிக் ஆவார்கள். அவர்களின் தாயார் சல்மா பின்த் ஹாரிஸா ஆவார்கள். அன்னார் 70 சஹாபாக்களுடன் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். மேலும் பத்ர், உஹது போர்களிலும் கலந்து கொண்டார்கள்.

இரண்டாவது சஹாபி ஹாரிஸ் பின் குஸமா ஆவார்கள். அன்ஸாரிகளைச் சார்ந்தவர். அவருடைய சுட்டுப் பெயர் அபூ பஷர் ஆகும். இவர் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவார்கள். இது பனு அப்துல் அஷ்ஹலின் நட்புக் கோத்திரமாகும். அன்னார் பத்ர், உஹது, அகழ் மற்றும் அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களோடு கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் குஸமா அவர்களுக்கும் இயாஸ் பின் புகைர் அவர்களுக்கும் இடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

தபூக் போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஒட்டகம் காணாமல் போய் விட்டது. எனவே நயவஞ்சகர்கள், இவருக்கு இவருடைய ஒட்டகம் எங்கு இருக்கிறது? என்பது கூட தெரியவில்லை. இவர் எவ்வாறு வானத்தின் செய்தியை அறிவார்? என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இது தெரிந்தபோது இறைவன் எனக்கு என்ன அறிவித்தானோ அது மட்டுமே எனக்குத் தெரியும் என்று கூறினார்கள்.

அன்னார் கூறினார்கள்: இப்போது எனக்கு ஒட்டகத்தைப் பற்றி தெரிவித்துள்ளான். அது ஒரு மலைக் குன்றின் அடிவாரத்தில் இருக்கிறது. எனவே ஹஸ்ரத் ஹாரிஸ் பின் குஸமா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதன் அடிப்படையில் ஒட்டகத்தை தேடிச் சென்றார்கள். அன்னாரது வஃபாத் ஹிஜ்ரி 40 ஆம் ஆண்டு தமது 67 வது வயதில் மதீனாவில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் நடந்தது.

அடுத்த சஹாபி ஹுனைஸ் பின் ஹுதாஃபா ஆவார்கள். அன்னாரது சுட்டுப்பெயர் அபூ ஹுதாஃபா ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு செல்வதற்கு முன்பே இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். ஹஸ்ரத் ஹுனைஸ் இரண்டாவது முறையாக அபிசீனியாவிற்குச் ஹிஜ்ரத் செய்த முஸ்லிம்களில் ஒருவர் ஆவார். மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தபோது ஹஸ்ரத் ரிஃபா பின் முன்ஸிர் அவர்களிடம் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுனைஸ் அவர்களுக்கும் அபூ அப்ஸ் பின் ஜபர் ஆகிய இருவருக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அன்னார் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஹஃப்ஸா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை திருமணம் செய்வதற்கு முன்பு ஹஸ்ரத் ஹுனைஸ் அவர்களின் மனைவியாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஹுனைஸ் அவர்கள் பத்ர் போருக்குப் பிறகு மதீனா திரும்பும்போது நோயுற்றார்கள். அதே நோயினாலேயே அன்னாரது உயிரை காப்பாற்ற முடியாமல் போய் விட்டது. அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். அதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஃப்ஸா அவர்களுடன் திருமணம் செய்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது ஜனாஸாவை தொழ வைத்தார்கள். அவர்கள் ஜன்னத்துல் பகீயில் உஸ்மான் பின் மழ்வூன் அவர்களுக்கு அருகே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

அடுத்த சஹாபி ஹாரிஸா பின் நுஃமான் ஆவார்கள். இவருடைய சுட்டுப் பெயர் அபூ அப்தில்லாஹ் ஆகும். ஹஸ்ரத் ஹாரிஸா அன்ஸாரி சஹாபி ஆவார்கள். இவர் கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனு

நஜ்ஜாரைச் சேர்ந்தவர். பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். கம்பீரமிக்க சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள்.

இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹாரிஸா பின் நுஃமான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கடந்து சென்றபோது அன்னாருடன் ஜிப்ரீல் அமர்ந்திருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் மெது மெதுவாக ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். ஹாரிஸா அவர்கள் அவர்களுக்கு ஸலாம் கூறவில்லை. ஜிப்ரீல் அவர்கள் இவர் ஏன் சலாம் கூறிவில்லை என்று கேட்டார். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹாரிஸாவிடம், நீங்கள் ஏன் சலாம் கூறவில்லை? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், நான் உங்களைக் கடந்து செல்லும்போது உங்களுடன் ஒருவர் அமர்ந்திருந்தார். நீங்கள் மெதுமெதுவாக பேசிக் கொண்டிருந்தீர்கள். நான் உங்களுடைய பேச்சுக்கிடையில் நுழைவதை விரும்பவில்லை என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னுடன் அமர்ந்திருந்த அந்த மனிதரை நீங்கள் பார்த்தீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், ஆம்! என்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் ஜிப்ரீல் ஆவார் என்று கூறினார்கள். மேலும் அவர்கள், இந்த மனிதர் சலாம் கூறியிருந்தால் நான் இந்த நபருக்கு பதில் கூறி இருப்பேன் என்று கூறினார்கள்.

பிறகு ஜிப்ரீல் இவர் 80 நபர்களில் ஒருவர் ஆவார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் ஜிப்ரீலிடம் இதற்கு என்ன பொருள்? என்று கேட்டேன் என்று கூறினார்கள். அதற்கு ஜிப்ரீல், ஹுனைன் போரில் உங்களுடன் உறுதியான பாதங்களுடன் நின்ற நபர்களில் ஒருவர் ஆவார். அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கும் அவர்களுடைய சந்ததிகளின் வாழ்வாதாரத்திற்கும் சுவர்க்கத்தில் அல்லாஹ் பொறுப்பேற்று இருக்கின்றான் என்று கூறினார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் பஷீர் பின் சஅது ஆவார்கள். இவருடைய சுட்டுப்பெயர் அபூ நுஃமான் ஆகும். சஅது பின் சஃலபா இவருடைய தந்தை ஆவார்கள். ஹஸ்ரத் பஷீர் பின் சஅது அறியாமை காலத்திலேயே எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருந்தார். இவர் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்ட 70 அன்ஸாரிகளில் ஒருவர் ஆவார். இவர் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு ஷஃபான் மாதத்தில் பஷீர் பின் சஅது அவர்களின் தலைமையில் 30 நபர்களுடன் ஒரு படையை ஃபதக் பின் மரத் என்ற இடத்திற்கு அனுப்பினார்கள். அவ்வாறே ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை 300 நபர்களோடு யமன் மற்றும் ஜவாருக்கு அனுப்பினார்கள். அங்கு கத்ஃபானுடைய சிலர் அயய்னா பின் ஹனஸூடன் இணைந்து இஸ்லாத்திற்கெதிராக திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் பஷீர் அவர்கள் அம்மக்களை சந்தித்து அவர்களை சிதறடித்தார்கள்.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நுஃமான் பின் பஷீர் அவர்கள் கூறுகின்றார்கள்: எனது தந்தையார் தமது செல்வத்திலிருந்து சிறிது எனக்கு வழங்கினார். எனவே எனது தாயார், நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சாட்சியாக்காதவரை இதில் நான் திருப்தியடைய மாட்டேன் என்று கூறினார்கள். எனவே எனது தந்தையார் எனக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பிற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சாட்சியாக்குவதற்காக சென்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் உங்களுடைய அனைத்து குழந்தைகளுக்கும் இவ்வாறே செய்தீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், இல்லை என்றார். அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்விற்கு கொள்ளுங்கள். உங்களுடைய பிள்ளைகளிடத்தில் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். எனவே எனது தந்தை திரும்பி வந்து அந்த அன்பளிப்பை திரும்பப் பெற்றுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னை சாட்சியாக்காதீர்கள். ஏனென்றால் நான் அநீதிக்கு ஒருபோதும் சாட்சியாக இருக்க மாட்டேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதனை விளக்கியவாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்த வழிகாட்டல் முக்கியமான பொருட்கள் தொடர்பாகவே ஆகும். சின்னன்சின்ற விஷயங்கள் குறித்து அல்ல.

ஹுஸூர் அவர்கள் இந்த விவகாரம் தொடர்பாக மேலும் விளக்கியவாறு கூறினார்கள்: ஒரு மகனின் புகாரினால் பெருமானார் (ஸல்) அவர்கள் அவனது தந்தையிடம், ஒன்று, நீங்கள் அவனுக்கும் அந்த பொருளைக் கொடுங்கள். அல்லது மற்றவரிடமிருந்தும் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

இதிலுள்ள ஞானம் என்னவென்றால் பிள்ளைகளுக்கு பெற்றோர் மீது கட்டுப்படுவது எவ்வாறு கடமையாக இருக்கிறதோ அவ்வாறே பெற்றோர்களும் தம்முடைய பிள்ளைகளை சரி சமமாக நடத்துவதும், அவர்களிடம் ஒன்று போல் அன்பு செலுத்துவதும் கடமையாகும். ஆனால் பெற்றோர்கள் இதற்கு மாற்றமாக நடந்தவாறு ஒருதலைபட்சமாக செயல்பட்டால் பிறகு குழந்தைகளும் தங்களுடைய கடமைகளிலிருந்து முகம் திருப்பிக் கொள்வது சாத்தியமாகும். பிறகு பிள்ளைகள் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் அதாவது சேவை செய்வதில் மகிழ்ச்சியடைய மாட்டார்கள்.

சில தாய் தந்தைகளின் குழந்தைகளுடனான இத்தகைய நடைமுறை பிள்ளைகளுக்கு தீங்கு விளைவிக்கவும், அவர்களுடைய நேசத்தை அழிக்கக் கூடியதுமாக இருக்கின்றது. எனவே இஸ்லாம் இதிலிருந்து தடுத்திருக்கின்றது.

எவ்வாறிருப்பினும் அன்பளிப்பு மற்றும் வஸிய்யத் ஏதாவது குறிப்பான குழந்தையின் பெயரில் செய்யப்பட்டால் அது ஆகுமாதல்ல. சில நேரங்களில் நிலைமை எப்படிப்பட்டதாக இருக்கின்றதென்றால், மூத்த மகனுக்கு உயர் கல்வியை கொடுத்து விட்டு சிறிய மகன்களின் நேரம் வரும்போது வேலையின்மை அல்லது குறைவான வருமானத்தின் காரணமாக அவர்களுக்கு உயர் கல்வியை கொடுக்க முடியவில்லை என்றால் அதனால் அவர் மீது எவ்வித குற்றச்சாட்டும் சுமத்த முடியாது.

இதற்கு நேர்எதிரில் ஒரு தந்தையார் தன்னுடைய பெரிய மகனுக்கு அவனுக்கு குடும்பம் வந்து விட்டது என்பதற்காக இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து நீ வியாபாரம் செய்து கொள் என்று கூறி தனியாக அனுப்பி விட்டார். ஆனால் அடுத்த மகனுக்கு குழந்தைகள் எல்லாம் இருந்தும் அவர் எதுவுமே தரவில்லை என்றால் அது ஆகுமானதல்ல. இது தனிச்சிறப்பு காட்டும் நடவடிக்கை ஆகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு பஷீர் அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீதின் மஃருகத்துல் அய்னத்தமரில் கலந்து கொண்டார்கள். அங்கு அவருக்கு ஷஹாதத் கிடைத்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிறைவேற்றாமல் விடப்பட்ட உம்ராவை நிறைவேற்றுவதற்காக ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு புறப்பட்டபோது ஆயுதங்களை முன்னே அனுப்பி இருந்தார்கள். அவற்றிற்கு ஹஸ்ரத் பஷீர் பின் சஅது அவர்களை கண்காணிப்பாளராக நியமித்தார்கள்.

நிறைவேற்றப்படாமல் விடப்பட்ட உம்ராவின் விபரத்தை எடுத்துக் கூறியவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹுதைபிய்யாவினுடைய சமாதான உடன்படிக்கையின் சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்களும், அவர்களுடன் வந்திருந்தவர்களும் உம்ரா செய்வதிலிருந்து தடுக்கப்பட்டார்கள். அப்போது அங்கு ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளில் ஒரு நிபந்தனை என்னவென்றால், அடுத்த வருடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய தோழர்களுடன் இணைந்து உம்ரா செய்வார்கள் என்பதாகும்.

அந்த நிபந்தனைக்கு ஏற்ப ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு துல்கஃதா மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது 2000 சஹாபாக்களுடன் உம்ரா செய்தார்கள். தவாஃப் செய்கின்ற காட்சியை நிராகரிப்பவர்களால் பார்க்க முடியாமல் அவர்கள் மலைக்கு சென்று விட்டார்கள். ஆனால் சிலர், இவர்கள் என்ன தவாஃப் செய்வார்கள்? இவர்களை பசியும், மதீனாவின் காய்ச்சலும் நசுக்கிவிட்டது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம் கூறினார்கள்: உங்களது ஆற்றலை வெளிப்படுத்திக் காட்டுங்கள். மேலும் போர்வையை எப்படி கட்ட வேண்டும் என்றால் அதன் மூலம் உங்களது தோள்பட்டை தெரிய வேண்டும். பிறகு தோள்பட்டையை குலுக்கு குலுக்கி தவாஃப் செய்யுங்கள். இதனை அரபியில் ரமல் என்று கூறுவார்கள். இந்த நடைமுறை இன்றும் உள்ளது. மேலும் கியாமத் வரை நிலைத்திருக்கும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அறிவிப்பில் வந்துள்ளது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் தமது வாழ்நாளில் நான்கு உம்ராவும் ஒரு ஹஜ்ஜும் செய்துள்ளார்கள்.

ஹஸ்ரத் பஷீர் பின் சஅது அவர்கள் அபூபக்ர் அவர்களின் கைகளில் சகீஃபா பனூ சஅதாவின் நாளில் பைஅத் செய்த முதல் அன்ஸாரியாக இருந்தார்கள். சகீஃபா பனூ சஅதா என்றால் என்ன?

இதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு சகீஃபா பனூ சாஅதா என்ற இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிநிதியை தேர்ந்தெடுப்பது தொடர்பான கூட்டம் பனூ கஸ்ரஜில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த கூட்டத்தைப் பற்றிய செய்தி ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு தரப்பட்டது.

உடனே ஹஸ்ரத் உமர் ஃபாரூக் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களை அழைத்துக் கொண்டு சகீஃபா பனூ சாஅதாவிற்குச் சென்றார்கள். பனூ கஸ்ரஜ் பிரதிநிதித்துவத்தின் வாதம் செய்பவர்களாகவும், பனூ அவ்ஸ் அதை எதிர்ப்பவர்களாகவும் இருக்கின்றனர் என்றும் அங்கு சென்ற பிறகுதான் தெரிய வந்தது. இந்நிலையில் ஓர் அன்ஸாரி சஹாபி, 'குரைஷிகளைச் சேர்ந்தவரே ஆட்சியாளராக இருப்பார்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய ஒரு கூற்றை நினைவூட்டினார். இந்த கூற்று அப்போது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் பெரும்பாலானவர்களின் உள்ளத்தில் பதிந்தது. உடனே அன்ஸாரைச் சேர்ந்தவர்கள் தங்களது வாதத்தை விட்டு விட்டு அபூபக்ர் அவர்களின் கிலாஃபத்தின் மீது பைஅத் செய்தார்கள்.

ஹஸ்ரத் அபூ மஸ்வூது அன்ஸாரி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை நாங்கள் சஅது பின் உபாதாவின் சபையில் இருந்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடத்தில் வந்தார்கள். ஹஸ்ரத் பஷீர் பின் சஅது அவர்கள் அன்னாரிடம், அல்லாஹ் உங்களுக்கு தரூது அனுப்புமாறு எங்களுக்கு கட்டளையிட்டிருக்கின்றான். நாங்கள் உங்கள் மீது எவ்வாறு தரூது அனுப்ப வேண்டும் என்று கேட்டார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: இந்த கேள்வியினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் அந்தோ! அவர் அன்னாரிடம் கேள்வி கேட்காமல் இருந்திருக்கலாமே! என்று நாங்கள் விரும்பினோம். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اللهم صل على محمد وعلىٰ اٰل محمد كما صليت علىٰ اٰل ابراهيم
وبارك علىٰ محمد وعلىٰ اٰل محمد كما باركت علىٰ اٰل ابراهيم فى العالمين انك حميد مجيد

மேலும் எவ்வாறு சலாம் கூற வேண்டும் என்று நீங்கள் அறிந்திருக்கின்றீர்களோ அவ்வாறு சலாம் சொல்ல வேண்டும்.

اللهم صل على محمد وعلىٰ اٰل محمد وبارك وسلم انك حميد مجيد

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நான் இப்போது ஒரு துஆவிற்காக கூற விரும்புகின்றேன். கடந்த நாட்களில் பங்களாதேஷில் எதிரிகள் அஹ்மதிகளின் வீடுகளையும், கடைகளையும் தாக்கினார்கள். சில வீடுகளை எரித்தார்கள். சில கடைகளை கொள்ளையடித்தார்கள். சில அஹ்மதிகள் காயமுற்றனர். அல்லாஹ் அங்குள்ள நிலைமைகளை சரியாக்குவானாக. மேலும் காயமுற்றவர்களுக்கு அல்லாஹ் விரைவாக உடல் ஆரோக்கியத்தை வழங்குவானாக. அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை சரி செய்வானாக. மேலும் அங்கு அந்த மக்கள் நிம்மதியாக மாநாட்டை நடத்துவார்களாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன். பாகிஸ்தானின் துன்யாபூர் என்ற இடத்தைச் சார்ந்த கண்ணியத்திற்குரிய சித்தீக்கா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் தென் அமெரிக்காவின் முபல்லிக் இன்சார்ஜாகிய லயீக் அஹ்மது முஸ்தாக் சாஹிப் அவர்களின் தாயார் ஆவார்கள். ஷேக் முஸஃப்பர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். 1 பிப்ரவரி அன்று தமது 74 வது வயதில் வஃபாத்தானார்கள். انا لله وانا اليه راجعون

ஹுஸூர் அவர்கள் மர்ஹூமாவின் நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு அவர்களுக்காக துஆ இவ்வாறு செய்தார்கள்: அல்லாஹ் மர்ஹூமாவுடன் மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவர்களின் தகுதியை உயர்த்துவானாக. அவர்களின் பிள்ளைகளுக்கும் அவர்களது நன்மைகளை தொடரச் செய்வதற்கு வாய்ப்பளிப்பானாக. அவர்களுக்காக அன்னார் செய்த துஆக்களை ஒப்புக் கொள்வானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்**